சார்பு நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை: – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, குளித்தலை.

2024–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05–ஆம் தேதி செவ்வாய்கிழமை

இ.ம.எண்.4/2024 in அ.வ.எண்.13/2015

1.கார்த்திகா.

2.தனஞ்செயன்.

3.கோகுலபிரியா. . . . மனுதாரர்கள் / வாதிகள்.

/எதிர்/

1.மகாமுனி (இறந்துவிட்டார்).

2.முருகேசன்.

3.முத்துலட்சுமி.

4.சின்னபொன்னு.

5.முத்தமிழ்செல்வன்.

6.கன்னுசாமி

7.சதீஷ்பாபு

8.இராமாயி . . . எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்.

உத்தரவு

இம்மனு உ.ந.சட்டம் கட்டளை 8, விதி 9–ன்படி மனுவுடன் தாக்கல் செய்யப்படும் Reply Statement ஐ உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 16.08.2023

இறுதி விசாரணை நடைபெற்ற நாள் : 23.10.2024

உத்தரவு பகரப்பட்ட நாள் : 05.11.2024

மனுதாரர்கள்/வாதிகளுக்காக : திரு.K.விஜயகுமார்–வழக்கறிஞர்

4, 6, 7 எதிர்மனுதாரர்கள்/

பிரதிவாதிகளுக்காக : திரு.R.கிருஷ்ணசாமி – வழக்கறிஞர்

1 முதல் 3 மற்றும்

5, 8 பிரதிவாதிகளுக்காக : எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டுள்ளார்கள்.

1. மனுவின் சுருக்கம்

இம்மனுவின் ஒன்றாம் மனுதாரர்/ஒன்றாம் வாதி இரண்டு, மூன்று மனுதாரர்கள் / வாதிகளுக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். Reply Statement தாக்கல் செய்வதற்கு சில முக்கியமான ஆவணங்கள் காணாமல் போய்விட்டதால் மேற்படி ஆவணங்களை தற்போது தான் தேடி எடுக்க முடிந்தது என்றும், மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் Reply Statement ஐ உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படும் Reply Statement ஐ உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. நான்கு, ஆறு மற்றும் ஏழு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. Reply Statement ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே பிராதில் உள்ள சங்கதிக்கு முரண்பட்டு உள்ளது. 20.01.1973 தேதியிட்ட கிரைய பத்திரம் மறுக்கப்படுகிறது. அசல் வழக்கின் முதல் பிரதிவாதியானவர் ஒரு மாரியம்மாள் என்பவரை திருமணம் செய்த சங்கதி மறுக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கு பாகப்பிரிவினை கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை. மனுதாரர்களின் மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு அளவிட முடியாத கஷ்ட

நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்கள்.

3. ஒன்று முதல் மூன்று மற்றும் ஐந்து, எட்டு எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை, ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர்கள் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர்கள் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், மனுதாரர்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என வாதிட்டார்.

8. தீர்வு

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

(அ) இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் முதல் நிலை தீர்ப்பாணை, தனிச்சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கில் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு, ஏனைய பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் மனுதாரர்கள் தரப்பில் Reply Statement தாக்கல் செய்ய சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதால் மேற்படி உரிய காலத்திற்குள் Reply Statement தாக்கல் செய்யாததை மன்னிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நான்காவது எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 11.06.2015 ம் தேதியிலும் ஐந்து முதல் ஏழாவது எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை கடந்த 30.11.2017 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் எந்த ஆவணங்கள் காணாமல் போய்விட்டது எப்போது கிடைக்கப்பெற்றது என்பதற்கு எவ்வித விளக்கத்தினையும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கவில்லை. அசல் வழக்கானது சாட்சிய விசாரணைக்காக பட்டியல் இடப்பட்ட சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எழுப்பப்பட்டுள்ள இதர சங்கதிகளை பொறுத்து இம்மனுவில் இத்தருணத்தில் விரிவாக விவாதிக்க இயலாது. அவ்வாறு விவாதிக்கும் பட்சத்தில் அவை அசல் வழக்கின் விசாரணையை பாதிப்படைய செய்யக்கூடும். இம்மனுவானது மிகவும் காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரர்களின் வழக்கினை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம். எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலன் கருதி இம்மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இம்மனுவின் மனுதாரர் மனு செலவுத்தொகையாக 4, 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.750/- (ரூபாய் எழுநூற்று ஐம்பது) வீதம் மொத்தத்தொகை ரூ.2250/- (மொத்தம் ரூபாய் இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது) 25.11.2024 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 26.11.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 05-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

E MUTHUSAMY

Digitally signed by E MUTHUSAMY
DN: cn=E MUTHUSAMY, ou=SRIVILLIPUTTUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

சார்பு நீதிபதி,

குளித்தலை.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

E MUTHUSAMY

Digitally signed by E MUTHUSAMY
DN: cn=E MUTHUSAMY, ou=SRIVILLIPUTTUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

சார்பு நீதிபதி,

குளித்தலை.